IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.89/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.25 PM.

பி.வா.சா. 1 சாட்சி சிவமுருகன்     த.பெ.வெள்ளையன் சிவணான்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 09.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பற்றி தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் செய்வேன். மேற்படி நிரூபண வாக்குமூலம் நான் விபரம் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் ஒத்தி பத்திரம் மோசடியானது 1ம் பிரதிவாதிக்கு தெரியாமல் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்று தெரிந்த பின்னர் எனது தந்தை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை.

2. மேற்படி ஒத்தி பத்திரம் சட்டப்படி செல்லாது என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வழக்கு விபரம் எனது தந்தைக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தந்தைதான் எனது வழக்கறிஞருக்கு வழக்கு தாக்கல் செய்ய விபரம் கூறினார் என்றாலும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் மோசடி பத்திரம் என்று சொன்னால் அதனை நான்தான் நிரூபணம் செய்யவேண்டும் என்றால் தெரியாது. மோசடி எந்த வகையில்

செய்யப்பட்டது என்றால் எனது தந்தை ஒத்தி பத்திரத்தில் கையெழுத்து செய்யவில்லை. வழக்கு சொத்திற்கு வடக்கே வாதியின் மகன் சுந்தரபாண்டி வீடு உள்ளது என்றால் சரிதான். தெற்கே கா.மூ.முத்துசிவணான்டி வீடு உள்ளது என்றால் எனது சியான் இடம் உள்ளது. மேற்கே புதுப்பட்டியான் பெரியகருப்பன் வீடு உள்ளது என்றால் தெரியாது. எனது தந்தை பெயரில் எத்தனை செண்டு உள்ளது என்றால் 21 செண்டு ஆகும்.

3. 2008 ல் எனது தகப்பனார் வாதியிடம் ரூ.1500/– பெற்றுக்கொண்டு ஒத்தி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் மேற்படி ஒத்தி பத்திரத்தில் உள்ள சொத்தில் வடக்கு பக்கம் வாதி இடமும், தெற்கு கா.மூ.முத்துசிவணான்டி, மேற்கு பக்கம் புதுப்பட்டியான் பெரியகருப்பன், கிழக்கு பக்கம் சிவன்காளைத்தேவர் இந்த நான்குமாலுக்குள் 8100 ச.அடி வாதிக்கு பாத்தியம் என்றாலும் நான் கூறுவதுபோல் 21 செண்டு கிடையாது என்றாலும் மேற்படி சொத்தான சர்வே எண். 258/2 ல் தான் வாதி 1ம் பிரதிவாதிக்கு ஒத்தி வைத்தார் என்றால் சரியல்ல.

4. வாதிக்கு மேற்படி சொத்து 1946 ன் உயில் மூலம் கிடைக்கபெற்றது என்றால் தெரியாது. மேற்படி உயில் மூலம் கிடைக்க பெற்ற சொத்தில் B சொத்து வாதிக்கும், A சொத்து வாதியின் அத்தை சிவனிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 196/2000 எனது வழக்கறிஞரால் மேற்படி உயில் உண்மை என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அந்த வழக்கின் வழக்குரை வா.சா.ஆ. 3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி வழக்குரை வா.சா.ஆ. 3 ல் A சொத்து வாதியின் அத்தை சிவனிக்கும், B சொத்து வாதிக்கும் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு

தெரியாது. மேற்படி வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது. வழக்கு சொத்து வாதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு 1946 முதல் வாதியின் முன்னோர்கள் அனுபவித்து அதன் அடிப்படையில் வழக்கு சொத்தை வாதி எனது தகப்பனாருக்கு ஒத்தி வைத்தார் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்து எனக்கு அடையாளம் தெரியவில்லை என்றாலும் நான்குமால், விஸ்தீரணம் தெரியவில்லை என்றாலும் சர்வே எண் தெரியாது என்றாலும் சரியல்ல. அதனால்தான் எதிர்வாதம் செய்வது தவறு என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 12.50 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.09 10:17:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.